செ.வெ.எண்.114 நாள்.14.03.2017

# பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒட்டல் தமிழ்நாடு, மாமல்லபுரம் மற்றும் படகு இல்லம், முட்டுக்காடு ஆகிய நிறுவனத்தின் வளாகத்தில் விழுந்த நிலையில் உள்ள காய்ந்த மரங்கள் பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி கோருதல் மூலம் கழிவு செய்ய நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் 23.03.2017 அன்று 03.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள விலைப்புள்ளிதாரார்களின் முன்னிலையில் ஏலம் கோரப்படும். இதில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் ஆகிய இரண்டில் யார் கூடுதல் தொகை கோருகின்றனரோ அவர்களுக்கு ஆணை வழங்கப்படும். இவ்விண்ணப்பம் மற்றும் விபரம் அடங்கிய படிவத்தினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம், கடற்கரை ஒய்வு வளாகம், மாமல்லபுரம் அலுவலக நாட்களில் பெற்று கொள்ளலாம்.

மேலாளர்,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,
கடற்கரை ஒய்வு வளாகம்,
மாமல்லபுரம்.
044–27442361–63

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.